பக்கங்கள்: 08

# காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 ஆவணி 13 ஞாயிற்றுக்கிழமை 29.08.2021 கதிர் 161

## தனிமைப்படுத்தல் விதிகள் மீறல்; 61 ஆயிரம் பேர் இதுவரை கைது

தனிமைப்படுத்தல் விதிகளை மீறியமை தொடர்பில் இன்று காலை 6 மணியுடன் முடிவடைந்த 24 மணித்தியாலங்களில் 718 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. ☞2

## பருத்தித்துறையில் கொரோனாவால் மூச்சுத்திணறி பெண்கள் இருவர் சாவு

### வைத்தியசாலை வளாகத்திலேயே அதிகாலை காவு

யாழ்., பருத்தித்துறை ஆதார வைத்திய சாலைக்கு இன்று அதிகாலை அழைத்துச் செல் லப்பட்ட இரண்டு பெண்கள் வைத்தியசாலை வளாகத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

அவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் இருவருக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அவர்களில் ஒருவர், பருத்தித்துறையைச் சேர்ந்த 22 வயதுடைய இளம் பெண் என்றும், மற்றையவர் வல்வெட்டித்துறையைச் ☞2

## 189 கிலோ கஞ்சா பொதிகளுடன் தம்பனைக்குளத்தில் 2 பேர் கைது



மன்னார்,ஓக.29

முருங்கன் பொலிஸ் பிரிவுக்குட் பட்ட தம்பனைக்குளம் பகுதியில் நேற்று சனிக்கிழமை மாலை ஒரு தொகுதி கேரளா கஞ்சாவுடன் இரு வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இராணுவத்தினருக்கு கிடைக் கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து இராணுவம் மற்றும் பொலி ☞2

# கையறு நிலையில் கோட்டா அரசு; இறக்குமதிக்கும் 'கோட்டா' முறை

## சீனி, பருப்புப் போன்ற அத்தியாவசியப் பொருள்கள் பங்கீட்டு அடிப்படையில் இனிமேல் விநியோகமாம்

கொழும்பு,ஓகஸ்ட் 29

நாட்டின் பொருளாதாரம் கையறு நிலைக்கு சென்றுள்ள சூழலில், போதிய அந்நிய செலாவணி கையிருப்பில் இல்லை என்ற பெரும் நெருக்கடியை எதிர்கொண்டிருக்கும் கோட்டாபய ராஜபக்ஷ அரசு, இனிமேல் அத்தியாவ சியப் பொருள்களின் இறக்குமதிக்கு 'கோட்டா' முறையில் பங்கிட்டு அனுமதி வழங்கும் திட்டம் ஒன்றை நடைமுறைப் படுத்துவது குறித்து ஆராய்ந்து வருவதாகக் கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

சீனி, பருப்பு போன்றவற்றின் விலை கிலோ 250 ரூபா என்ற உச்சத் ☞2



## வாள் வெட்டில் உயிரிழந்தவரின் அஸ்தி பாதுகாப்புடன் கொட்டடி மயானத்துக்கு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,ஓக.30

யாழ்ப்பாணம் குருநகர்ப் பகுதியில் வாள் வெட்டில் உயிரி ழந்த இளைஞனின் அஸ்தி கொட்டடி மயானத்திற்கு பாடை கட்டி மேள வாத்தியத்துடன் படையினரின் பாதுகாப்புடன் எடுத்துச் செல்லப்பட்டது.

குருநகர்ப் பகுதியில் ☞2

## வலி வடக்கு அகதிகளை குடியேற்றிய பின் தமிழக அகதிகளைப் பின்னர் பார்க்கலாம்!

### அமைச்சர் நாமலுக்கு மனோ கணேசன் உடன் பதிலடி



கொழும்பு,ஓக.29

தமிழகத்து இலங்கை அகதிகளை இங்கு வரவேற்க முன், இன்றும் யாழில், பல பத்தாண்டுகளாக இடம் பெயர் முகாம்களில் வாழும் தமிழ் மக் களை மீளக் குடியேற்றுங்கள்.

வலி. வடக்கில் பலாலி உட்பட வளமான காணிகளில் இருந்து இரா ணுவத்தை அகற்றி, இம்மக்களை தம் சொந்த நிலங்களுக்கு போக விடுங்கள் - என்று அமைச்சர் நாமல் ராஜபக் ஷவைக் கோரியிருக்கின்றார் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன். ☞2

## 3நாள்களுக்குள் 635 பேர் மரணம்

### 13,671 பேருக்குத் தொற்று

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் மூன்று நாள்களுக்குள் 635 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஓகஸ்ட் 25ஆம் திகதி முதல் 27ஆம் திகதி வரையான காலப் பகுதி யிலேயே இம்மரணங் கள் பதிவாகியுள்ளன.

25ஆம் திகதி 209 பேரும், 26ஆம் திகதி 214 பேரும், 27ஆம் திகதி 212 பேரும் இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

அத்துடன் குறித்த மூன்று நாள்களுள் நாட்டில் 13 ஆயிரத்து 671 பேருக்கு வைரஸ் தொற்றியுள்ளது.

## இலங்கையில் நாளாந்தம் 140 தொன் ஒட்சிசன் தேவை

கொரோனா நோயாளர் களுக்கு வழங்குவதற்காக வாராந்தம் 300 தொன் ஒட்சி சனை இந்தியாவிலிருந்து கொண்டு வருவதற்குத் தீர்மா னித்துள்ளது என ஔடத உற்பத் திகள், வழங்கல் மற்றும் ஒழுங்கு படுத்தல் இராஜாங்க அமைச் சின் செயலாளர், வைத்தியர் சமன் ரத்நாயக்க தெரிவித்துள் ளார்.

நாட்டில்தற்போதுகொரோனா நோயாளர்களுக்கு நாள் ஒன் றுக்கு 140 தொன் ஒட்சிசன் வழங்கப்படுகின்றது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொரோனாத் தொற்று பரவுவதற்கு முன்னர் ☞2

## யாழில் கொரோனாவுக்கு ஒரே வாரத்தில் 31பேர் சாவு

### மொத்த உயிரிழப்பு 229 ஆக அதிகரிப்பு

யாழ். மாவட்டத்தில் கொரோனாத் தொற்று காரணமாக உயிரிழப்பவர்களது எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வரும் நிலையில் கடந்த ஒரு வாரத்தில் மட்டும் 31 கொவிட் மரணங்கள் இங்கு பதிவாகியுள்ளன.

யாழ். மாவட்ட செயலகத்தின் கொவிட்-19 புள்ளிவிவர அறிக்கையின் அடிப்படையில் இவ்விடயம் உறுதி செய்யப்பட் டுள்ளது. ☞2

## பலாலி விமான நிலையத்தின் அபிவிருத்தி தாமதம் ஏன் என சுரேன் ராகவன் கேள்வி!

### 'ஸேம் சைட் கோல்' அடிக்கின்றார் அவர்

யாழ். சர்வதேச விமான நிலையத்தில் பாரிய விமானங்கள் தரையிறங்கக் கூடிய வகையில் ஓடுபாதைகளை அபிவிருத்தி செய்வதற்கான நிதி இருந்தும், அரசாங்கம் அதனை செயற்படுத்தாமல் இருக்கின்றது என அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சுரேன் ராகவன் தெரிவித்தார்.

வடக்கில் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப் பட்டுவரும் அபிவிருத்திச் செயற்திட்டங்களின் முன்னேற்றம் தொடர்பில் தமிழ்ப் பத்திரிகை ஒன்று எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே நாடாளுமன்ற உறுப்பினர் சுரேன் ராகவன் இதை குறிப்பிட்டார். ☞2

## வவுனியாவில் இன்று கொவிட்டால் மூவர் மரணம்

வவுனியா வைத்தியசா லையில் சிகிச்சை பெற்று வந்த கொவிட் தொற்றாளர் மூவர் இன்று மரணமடைந் துள்ளனர் என சுகாதாரப் பிரி வினர் தெரிவித்துள்ளனர்.

கொவிட் தொற்று ☞2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## பலாலி......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு, கிழக்கு மாகாணங்களை பொறுத்தவரை அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்த முடியாத வகையில் இந்த காலகட்டங்களில் அரசாங்கம் பாரிய நிதி நெருக்கடியை சந்தித்து வருவதைக் குறிப்பிட வேண்டும்.

என்றாலும் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ள சர்வதேச நிதி உதவியுடனான அபிவிருத்தித் திட்டங்கள் ஏன் தேங்கிக் கிடக்கின்றன என்பது எனக்குப் புரியாமல் உள்ளது.

குறிப்பாக யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையத்தை குறிப்பிட முடியும்.

அந்த விமான நிலையத்தில் பாரிய விமானங்கள் தரையிறங்க கூடிய வகையில் ஓடுபாதைகளை அபிவிருத்தி செய்வதற்கான நிதி அரசாங்கத்திடம் இருக்கின்றது.

அதனை ஏன் செயற்படுத்தாமல் இருக்கின்றார்கள் என்பது எனக்குத் தெரியாது. அது சம்பந்தமான அமைச்சர் அதில் அக்கறை செலுத்தாமல் இருக்கின்றாரா?

அந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவது அவசியம். யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையம் என்பது இந்திய பயணிகளுக்கானதாக மட்டுமன்றி அது சர்வதேச விமான நிலையமாக உயரும் போது, மத்திய கிழக்கில் இருந்து இந்தியாவுக்குச் செல்லும் பயணிகளுக்கான 'ட்ரான்சிஸ்ட் பொயின்ட்' ஆக அமையும் என்பதையும் அத்துடன் 'டியூட்டி ப்ரீ' வர்த்தகத்துக்கான பாரிய வாய்ப்பை ஏற்படுத்திக் கொள்ளமுடியும் என்பதையும் குறிப்பிட முடியும்.

சம்பந்தப்பட்ட அமைச்சர் அந்த விடயத்தில் கவனம் செலுத்துவார் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

அதேவேளை, பருத்தித்துறையில் இலங்கையில் மிகப்பெரிய மீனவர் துறைமுகத்தை நிர்மாணிப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் ஏனோ மேலும்மேலும் அது தாமதமாவதற்கான காரணம் தொடர்பில் ஊடகங்களே கேள்வியெழுப்ப வேண்டும்.

சம்பந்தப்பட்ட அமைச்சர் அது தொடர்பில் சில விடயங்களைத் தெரிவித்துள்ளார். எனினும் அரசாங்கம் ஆட்சிக்கு வந்து ஒரு வருட காலம் நிறைவு பெற்றுள்ள நிலையில் அத்தோடு சம்பந்தப்பட்ட அமைச்சரே தமிழ் சமூகத்திற்கும் மீனவர்களுக்கும் அரசாங்கத்திற்கும் அது தொடர்பில் பதிலைத் தெரிவிப்பார் என்று நான் நம்புகின்றேன்- என்றார்.

## வலி......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழகத்தில் உள்ள ஈழ அகதிகளுக்கு உதவித் திட்டங்களை வழங்கும் தமிழக முதல்வர் ஸ்டாலின் அறிவிப்பை வரவேற்ற அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, அங்குள்ள ஈழத் தமிழ் அகதிகளை இங்கு மீண்டு வருவதை வரவேற்கத் தாங்கள் தயாராக இருக்கின்றனர் எனத் தமது டுவிட்டர் செய்தியில் நேற்றுத் தெரிவித்திருந்தார்.

அதற்கு பதிலடியாகவே இன்று தமது டுவிட்டர் செய்தியில், தமிழகத்தில் இருக்கும் இலங்கை அகதிகளை இங்கு வரவேற்க முன், யாழில், பல பத்தாண்டுகளாக இடம்பெயர் முகாம்களில் வாழும் தமிழ் மக்களை மீளக்குடியேற்றுங்கள் என்று மனோ கணேசன் தெரிவித்திருக்கின்றார்.

## யாழில்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஓகஸ்ட் 22 முதல் 28 (நேற்று) வரையிலான 07 நாள்களில் இவ்வாறு 31 கொவிட்-19 மரணங்கள் யாழ். மாவட்டத்தில் நிகழ்ந்துள்ளன.

இதன் மூலம் இந்த மாதத்தின் முதல் 28 நாள்களிலும் 98 கொவிட்-19 மரணங்கு பதிவாகியுள்ளன.

இதையடுத்து யாழ். மாவட்டத்தில் ஓகஸ்ட்28 வரையில் கொவிட்-19 காரணமாக உயிரிழந்துள்ளவர்களது எண்ணிக்கை 229 ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 189 கிலோ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஸார் இணைந்து திடீர் சுற்றிவளைப்பு மேற்கொண்ட போது தம்பனைக்குளம் பகுதியில் வைத்து 189 கிலோ கேரள கஞ்சா பொதிகளுடன் இருவர் கைது செய்யப்பட்டனர்.

மன்னார் பிரதான வீதியூடாக மதவாச்சி நோக்கி சென்று கொண்டிருந்த வாகனம் ஒன்றை பாதுகாப்புத் தரப்பினர் இடை மறிக்க முற்பட்ட போது அந்த வாகனம் நிறுத்தாமல் சென்றதாகக் கூறப்பட்டது. இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து தம்பனைக்குளம் பகுதியில் வைத்து அந்த வாகனத்தை நிறுத்தித் சோதனையிட்டனர்.

இதன்போதே வாகனத்தில் பொதி செய்யப்பட்ட நிலையில் கொண்டு செல்லப்பட்ட மேற்படி கேரள கஞ்சாப் பொதிகள் மீட்கப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட இருவரும் தென் பகுதியைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிய வருகின்றது.

கைது செய்யப்பட்ட இருவரும், கைப்பற்றப்பட்ட கேரள கஞ்சா பொதிகளுடன் முருங்கன் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

முருங்கன் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## 61 ஆயிரம்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அத்துடன் 13 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதற்கமைய, தனிமைப்படுத்தல் விதிகளை மீறியமை தொடர்பில் கடந்த ஒக்டோபர் முதல் இதுவரை 61 ஆயிரத்து 6 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மேல் மாகாணத்தின் எல்லைகளில் அமைக்கப்பட்டுள்ள 13 வீதிச் சோதனை சாவடிகளில் மேல் மாகாணத்துக்குள் நேற்று பிரவேசித்த 2 ஆயிரத்து 82 வாகனங்கள் சோதனையிடப்பட்டுள்ளன.

அத்துடன், மேல் மாகாணத்தில் இருந்து வெளியேறிய 1,258 வாகனங்கள் நேற்று சோதனையிடப்பட்டன என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

## இலங்கையில்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டில் நோயாளர்களுக்காக 20 தொன் ஒட்சிசன் அளவு போதுமானதாக இருந்தது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## பருத்தித்துறையில்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேர்ந்த 69 வயதுடைய வயோதிபப் பெண் என்றும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இருவரும் காய்ச்சலுடன் மூச்சுத் திணறிய நிலையில் வைத்தியசாலைக்கு அழைத்து வரப்பட்டிருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது

## கொவிட்டால்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காரணமாக வவுனியா வைத்தியசாலையின் கொவிட் சிகிச்சை விடுதியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி மூவர் மரணமடைந்துள்ளனர்.

வவுனியா, இரணை இலுப்பைக் குளம் பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவரும், நெளுக்குளம் பகுதியைச் சேர்ந்த ஆண் ஒருவரும், வவுனியா நகரப் பகுதியைச் சேர்ந்த ஆண் ஒருவருமே இவ்வாறு மரணமடைந்தவர்களாவர்.

மூவரது சடலங்களையும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி தகனம் செய்வதற்குரிய நடவடிக்கைகளை சுகாதாரப் பிரிவினர் முன்னெடுத்துள்ளனர்.

## வாள்வெட்டில்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்ற வாள் வெட்டில் படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வந்த ஜெரோன் (வயது 24) என்கின்ற இளைஞரே உயிரிழந்த நிலையில் மரணத்தின் பின்னரான பரிசோதனையில் அவருக்குக் கொரோனாத் தொற்று இருப்பது கண்டறியப்பட்டது. உயிரிழந்தவரின் உறவுகள் ஐயம்கொண்டு நீதிமன்றை நாடியதனால் மீண்டும் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு உடல் கொரோனா விதிமுறையின் கீழ் தகனம் செய்யப்பட்டு அதன் அஸ்தி உறவுகளிடம் கையளிக்கப்பட்டது. இவ்வாறு கையளிக்கப்பட்ட அஸ்தியின் இறுதி ஊர்வலமே இன்று இடம்பெற்றது.



இதன்போது அஸ்தி நிலப்பாவாடை விரித்து மேளவாத்தியத்துடன் பாடையில் எடுத்துச் செல்லப்பட்டு கொட்டடி மயானத்தில் இறுதி நிகழ்வு இடம்பெற்றது. இராணுவத்தினர், விசேட அதிரடிப்படையினர், பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர்.

## கையறு........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தைத் தொட்ட நிலையில் அத்தகைய அத்தியாவசியப் பொருள்களை நியாய விலையில், பங்கீட்டு அடிப்படையில் சதொச மூலம் விநியோகிக்க அரசு தயாராகி வருகின்றது என்றும் கூறப்படுகிறது.

போதிய அந்நிய செலாவணி கையிருப்பில் இல்லை. அதனால் அத்தியாவசிய பொருளைக்கூட தேவையான அளவு இறக்குமதி செய்ய முடியாத கையறு நிலைக்குக் கோட்டாபய அரசு தள்ளப்பட்டுள்ளது.

இதனால் அத்தியாவசிய பொருள்களின் இறக்குமதியைக் கூட கோட்டா முறையில் - பிரித்துத் தொகுதி தொகுதியாக அனுமதி வழங்கும் முறையில் - மேற்கொள்ள அரசு ஆலோசித்து வருகின்றது.

மாதத்திற்கு இவ்வளவு சீனி, இவ்வளவு பருப்பு என்று பெரு வர்த்தகர்களுக்கு கோட்டா வழங்கி, அதன் மூலம் இறக்குமதிக்கான அந்நிய செலாவணி செலவாவதைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர அரசு தீர்மானித்திருப்பதாகக் கூறப்படுகின்றது.

இதேவேளை அரிசி, பருப்பு, சீனி, பால் மா போன்றவற்றைக் கணிசமான அளவு அரசு இறக்குமதி செய்து, நியாய விலையில் பங்கு அடிப்படையில், வாழ்வாதாரம் குறைந்த தரப்பினருக்கு மட்டும், சதொச ஊடாகப் பங்கிட்டு வழங்குவது குறித்தும் அரசு ஆலோசித்து வருவதாக வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன கூறியிருக்கின்றார். (மேலதிக விவரங்கள் மூன்றாம் பக்கத்தில் இன்றைய ஆசிரிய தலையங்கத்தில்)

விளம்பரத் தொடர்புகளுக்கு
தொலைபேசி இலக்கம்-
076 443 8622
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## மரண அவஸ்தையில் நாடு

கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்கள் மட்டுமல்லர், நாடும் கூட மரண அவஸ்தையில்தான் சிக்குண்டு இருக்கின்றது .

சரித்திரம் திரும்புகின்றது. 1970 – 1977 இல் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி – இடதுசாரிகள், ஸ்ரீமாவோ தலைமையில் அமைத்த ஐக்கிய முன்னணி கூட்டு அரசில் நடந்தவை மீண்டும் அப்படியே திரும்பவும் அரங்கேறும் அவலம்.

அத்தியாவசியப் பொருள்களை பங்கீட்டு அடிப்படையில் மக்களுக்கு வழங்கும் இக்கட்டுக்கு அரசு வந்துவிட்டது. நாட்டின் பொருளாதாரம் அவ்வளவு தூரத்துக்குப் படுத்துவிட்டது. இனி அது நிமிரும் என்று நம்புவதற்கு இடமில்லை. உச்ச விலை நிர்ணயிக்கப்படாத சீனியினதும் பருப்பினதும் விலைகள் எகிறிவிட்டன. இன்றைய நிலையில் கிலோ சீனியும் பருப்பும் தலா 250 ரூபா எல்லையை தொட்டு நிற்கின்றன.

ஸ்ரீமாவோவின் காலத்தில் கையில் சீனியை வைத்து நக்கி நக்கித் தேநீர் குடித்த நிலைமைக்கு நாட்டுமக்கள் திரும்பியுள்ளனர். நெருக்கடியில் இருக்கும் – வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு இருக்கும் – அடிமட்ட மக்களுக்கு சுழற்சி அடிப்படையில் – பங்கீட்டு ரீதியில் – சீனி, பருப்பு போன்ற அத்தியாவசியப் பொருள்களைக் குறிப்பிட்ட அளவு வழங்கும் திட்டம் குறித்துப் பரிசீலிக்கப்படுவதாக தெரிகின்றது. சதொச ஊடாக இவ்வாறு வழங்குவதற்கான திட்டம் ஒன்றை வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன அமைச்சரவைக் கூட்டத்தில் தெரிவித்திருக்கின்றார். அவரும் கொவிட் தொற்றுக்கு உள்ளாகியிருக்கின்றமையால் இந்தத் திட்டம் கூட எப்போது நடைமுறைக்கு வரும் என்று தெரியவில்லை.

ரூபாவின் பெறுமதியை செயற்கையாக ஒரு மட்டத்தில் அரசு பேணினாலும் அந்தப் பெறுமதியில் ரூபாவுக்கு எதிராக டொலரைத் தேவையான அளவில் கொள்வனவு செய்ய முடியாத நிலையில் பெரு வர்த்தகர்கள் இருக்கின்றார்கள். சீனியின் இறக்குமதிக்கான கடன் உறுதிப்படுத்தும் கடித உடன்பாடுகளை (Letters of Credit) பெரு வர்த்தகர்கள் வழங்கியபோது டொலரின் பெறுமதியை 182 ரூபா மட்டத்தில் அரசு வைத்திருந்தது. இப்போது பொருள் வந்துவிட்டது. டொலரின் பெறுமதி 203 ரூபா என்கிறது அரசு. ஆனால் அந்த நாணய மாற்று வீதத்தில் கடன் வழங்கும் கடித உடன்பாட்டை நிறைவுசெய்வதற்கு அரசிடம் டொலர் கையிருப்பு இல்லை. அரசு கைவிரிக்கின்றது. அதனால் வெளியில் வங்கிகளின் டொலர் விலைக்கு அல்லது தனியார் கையாளும் டொலர் பெறுமதிக்கு – டொலர் சுமார் 230 ரூபா என்ற ரீதியில் – கொடுப்பனவை செய்து முடித்திருக்கிறார்கள். சுமார் 230 ரூபா என்ற பெறுமதிக்கு கொள்வனவு செய்யப்பட்ட சீனியை கிலோ 250 ரூபாப்படிதான் விற்க முடியும் என்கிறார்கள் அந்தப் பெரு வர்த்தகர்கள்.

அடுத்தடுத்த மாதங்களில் எரிபொருளின் நிலைமையும் இதேதான் என்கின்றன அரசியல் வட்டாரங்கள். எரிபொருள் நெருக்கடி கழுத்தைச் சுற்றி வருகையில் அந்தப் பிரச்சினையைச் சமாளிக்கவும் தனது வழமையான ‘கடன் வாங்கி கல்யாணம்’ திட்டத்துக்கு அரசு தயாராவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஐக்கிய அரபு எமிரேட்ஸ் இடமிருந்து நீண்ட கடன் அடிப்படையில் பெருந்தொகை மசகு எண்ணெயை இறக்குமதி செய்யும் ஒரு ‘டீலில்’ அரசு முனைப்பாக இருக்கின்றது எனத் தெரிகின்றது. அந்தக் கடன் சரி வந்தால் எரிபொருளுக்காக அந்நிய செலாவணியை இப்போது செலவு செய்யாமல் தவிர்க்கலாம். அது அரசுக்குத் தற்காலிக ஆறுதல் தரும் விடயம். ஆறு மாதக் கடன் மூலம் 2 பில்லியன் டொலர் (சுமார் 45 ஆயிரம்கோடிரூபா) பெறுமதியான அந்நியசெலாவணியை அரசு இப்போதைக்குத் தக்கவைத்துக் கொள்ளலாம் என்று கருதப்படுகின்றது. இந்த மரண அவஸ்தையோடு நாட்டின் பொருளாதாரம் எத்தனை நாளைக்குத் தாக்குப் பிடிக்கும் என்பது கேள்விக்குரியதுதான்.



# இலங்கையர்களுக்கு ஆதரவு கரம்நீட்ட சீன மக்கள் ஒருபோதும் தயங்கார்கள்!

## சீனத் தூதரக பாதுகாப்பு இணைப்பாளர் தெரிவிப்பு

இலங்கையர்களுக்கு கஷ்டங்கள் ஏற்படும் சகல சந்தர்ப்பங்களிலும் சீன மக்கள் தங்கள் ஆதரவு கரங்களை நீட்ட ஒருபோதும் தயங்க மாட்டார்கள்.

சீன இராணுவத்தால் வழங்கப்படும் இந்தத் தடுப்பூசி தொகுதிகள் கொவிட்-19 தொற்று நோயை ஒற்றுமையின் மூலம் எதிர்த்துப் போராடுவதற்கு வழங்கப்பட்டதாகும் என்று கொழும்பிலுள்ள சீனத் தூதரகத்தின் பாதுகாப்பு இணைப்பாளர் சிரேஷ்ட கேர்ணல் டோங் தெரிவித்தார்.

இலங்கை பாதுகாப்பு படையினருக்காக சீன மக்கள் குடியரசின் தேசிய பாதுகாப்பு அமைச்சால் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ள மூன்று லட்சம் சினோபோர்ம் தடுப்பூசிகள் நேற்று (சனிக்கிழமை) நாட்டை வந்தடைந்தன.

குறித்த தடுப்பூசிகளை இலங்கைக்கான சீனத் தூதகரத்தின் பாதுகாப்பு இணைப்பாளர் சிரேஷ்ட கேர்ணல் வான் டோங், பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் கமல் குணரத்னவிடம் (ஓய்வு) உத்தியோகபூர்வமாகக் கையளித்தார். இவ்வாறு தடுப்பூசிகளைக் கையளிக்கும் நிகழ்வின்போதே சீனத் தூதரக பாதுகாப்பு இணைப்பாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

# தொற்றாளர்களின் சடுதியான அதிகரிப்பினால் நெருக்கடிக்குள்ளாகின வைத்தியசாலைகள்

## இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி கவலை



கொவிட் தொற்றை கட்டுப்படுத்தும் போராட்டத்துக்காக மருத்துவ உபகரணங்கள் நன்கொடையாக கிடைக்கப்பெறுகின்றன.

நேரடி நிதி விடுவிப்பு ஊடாக 200 இயற்கை சுவாசக்கருவிகள் விரைவில் கிடைக்கப்பெறவுள்ளன.

இவை நோர்வே ஊடாக கிடைக்கப்பெறவுள்ளதுடன் அமெரிக்காவிலிருந்து தொடர்பாடல்கள் முன்னெடுக்கப்படுகின்றன எனத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண் டோபுள்ளே, உலக நாடுகளில் வாழும் இலங்கையர்கள் நெருக்கடியான இன்றைய நிலையில் ஒத்துழைப்புகளை வழங்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையில் கொவிட்-19 தொற்று மிகவும் மோசமாக பரவி வருகின்றது. தடுப்பூசியை மாத்திரம் நம்பிய நிலையில் அரசாங்கம் செயற்படுகின்றது.

ஆனால் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் தொற்றாளர்களுக்குத் தேவையான சிகிச்சைகள் மற்றும் அவற்றுக்கான உபகரணங்கள் தொடர்பாகக் கவனத்தில் கொள்ளப்படவேண்டியுள்ளதாக மருத்துவ அதிகாரிகள் மற்றும் சுகாதாரப்பிரிவினர் வலியுறுத்தி வருகின்றனர். குறிப்பாக நோயாளிகளுக்கான கட்டில்கள் மற்றும் இயற்கை சுவாசக்கருவி போன்றவை போதுமானவையாக இல்லை என்பதே பலரினதும் குற்றச்சாட்டாக உள்ளது.

நாளுக்கு நாள் தொற்றாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ளது. நேற்று (சனிக்கிழமை) உறுதிப்படுத்தப்பட்ட தரவுகளின் படி 4 ஆயிரத்து 561 பேர் ஒரே நாளில் கொவிட் தொற்றுக்குள்ளாகியுள்ளனர். இது வரையில் சுமார் 55 ஆயிரத்து 399 பேர் வரை நாடளாவிய ரீதியில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இவ்வாறானதொரு பெரும் தொகை நோயாளர்களுக்கு சிகிச்சை அளிக்கக் கூடிய கட்டமைப்பு இலங்கையின் வைத்தியசாலைகளில் காணப்படுகின்றனவா என்ற கேள்வி எழுந்துள்ள நிலையில் தொடர்ந்தும் நாளுக்கு நாள் தொற்றாளர்கள் அதிகரிக்கின்ற நிலையில் சுகாதாரக் கட்டமைப்பிற்கு பாரிய சவாலாக அமையும் எனவும் அவர் தெரிவித்தார்.

# தடுப்பூசி வழங்கல் 2 ஆம் கட்டம் கிளிநொச்சியில் 4 ஆம் திகதி முதல்

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவிப்பு

கிளிநொச்சியில் தடுப்பூசி வழங்கலின் இரண்டாம் கட்ட நடவடிக்கை எதிர்வரும் 4ஆம் திகதி முதல் முன்னெடுக்கப்படும் என்று பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் சரவணபவன் தெரிவித்துள்ளார்.

தடுப்பூசி பெற்ற கிளிநொச்சி மக்களுக்கான இரண்டாம் கட்ட தடுப்பூசி செலுத்தும் திகதி நேற்று (சனிக்கிழமை) ஆகும்.

இதன் அடிப்படையில் தடுப்பூசியைப் பெறுவதற்காக ஊரடங்கின் மத்தியிலும் அங்கு சென்ற மக்கள் தடுப்பூசி செலுத்தப்படாமையால் ஏமாற்றத்துடன் வீடு திரும்பினர் என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்நிலையில் இது தொடர்பில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரை தொடர்பு கொண்டு வினவிய போது அதற்கு பதிலளித்த பணிப்பாளர்

இரண்டாம் கட்ட தடுப்பூசிகள் தொடர்பிலான தகவல் சற்றுமுன்னரே தமக்கு கிடைத்ததாகவும், அதன் அடிப்படையில் எதிர்வரும் 4ஆம் திகதி அவை தமக்கு கிடைக்கப் பெறும் என்றும், அதன் அடிப்படையில் அவற்றை 4 அல்லது 5 ஆம் திகதி முதல் செலுத்த முடியும் என்று தாம் எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# மற்றொரு பயங்கரவாதத் தாக்குதல் காபூலில் நடைபெறுவதற்கான வாய்ப்பு?



ஆப்கானிஸ்தான் அரசுக்கு எதிரான நீண்டகால போரில் தலிபான் பயங்கரவாதிகள் வசம் ஆட்சி அதிகாரம் முழுமையாக சென்றுள்ளது. இதனை முன்னிட்டு ஆப்கானிஸ்தானில் சிக்கியுள்ள தங்கள் நாட்டு குடிமக்களை அமெரிக்கா, இந்தியா, இங்கிலாந்து, பிரான்ஸ் உள்ளிட்ட பல நாடுகள் மீட்டு வருகின்றன. சொந்த நாட்டை விட்டு வெளியேற நினைக்கும் ஆப்கானிஸ்தான் நாட்டு மக்களும் மீட்கப்பட்டு வருகின்றனர். அமெரிக்க விமானங்கள் மற்றும் விமானப்படைகள் மூலம் இதுவரை 1,12,000 பேர் வெளியேறினர். இன்னும் பலர் வெளியேற முயற்சிக்கின்றனர் எனத் தெரிகிறது.

இந்த மீட்புப் பணிகள் காபூல் விமான நிலையத்தில் இருந்து நடைபெறுகிறது. இதற்காக, காபூல் விமான நிலையம் ஆனது, அமெரிக்கப் படைகளின் கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டது.

வருகிற 31ஆம் திகதிக்கு பின் காபூலில் மீட்புப் பணிகள் நிறுத்தப்பட்டு படைகள் முழுவதும் திரும்பப்பெறப்படும் என அமெரிக்க அதிபர் பைடன் தெரிவித்துள்ளார். இதனால், ஆயிரக்கணக்கானோர் காபூல் விமான நிலையத்திற்கு வெளியே குவிந்து வருகின்றனர்.

காபூல் விமான நிலையம் மீது பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தலாம் என எச்சரிக்கை விடப்பட்டிருந்த நிலையில், காபூல் விமான நிலையத்திற்கு வெளியே கடந்த சில நாள்களுக்கு முன் இரட்டை குண்டு வெடிப்பு தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்த தாக்குதலில் 190 பேர் உயிரிழந்து உள்ளனர். அவர்களில் 13 பேர் அமெரிக்க பாதுகாப்பு படை வீரர்கள் ஆவர். இந்த இரட்டை குண்டு வெடிப்பு தாக்குதலுக்கு ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பு பொறுப்பேற்றது. இந்நிலையில், அமெரிக்க அதிபர் ஜோ பைடன் கூறியதாவது: காபூலில் கள நிலவரம் தொடர்ந்து மிகவும் அபாயகரமான பகுதியாகவே உள்ளது. விமான நிலையத்தில் பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தும் அபாயம் அதிகளவில் உள்ளது.

அடுத்த 24 முதல் 36 மணி நேரத்தில் பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்துவதற்கான வாய்ப்புகள் அதிகளவில் உள்ளன என இராணுவ வீரர்கள் தம்மிடம் தெரிவித்து உள்ளனர் இவ்வாறு அவர் கூறினார்.

மேலும் காபூலில் இருக்கும் அமெரிக்க குடிமக்கள் விமான நிலையத்தில் இருந்து விலகி இருக்குமாறு ஜோ பைடன் அறிவுறுத்தியுள்ளார்.


தொடர்ந்து, விமான நிலையம் மற்றும் நுழைவு வாயில்களில் பயங்கரவாத தாக்குதல் நடப்பதற்கு வாய்ப்புகள் உள்ளன என, காபூலில் உள்ள அமெரிக்க தூதரகம் எச்சரிக்கை விடுத்து உள்ளது.

# அல்பாவுடன் ஒப்பிடுகையில் டெல்டா மிக ஆபத்தானது!

கொரோனாவின் உரு மாறிய வைரஸான டெல்டா வைரஸ், முதன்முதலாக இந்தியாவில் கண்டறியப்பட்டது. இப்போது அது உலகின் சுமார் 150 நாடுகளுக்கு பரவி விட்டது. இந்த வைரஸ்பற்றி இங்கிலாந்து பொது சுகாதாரத்துறையும், கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகமும் கூட்டாக ஒரு ஆய்வு நடத்தி உள்ளன. இதன் முடிவுகள், திலேன்செட் பத்திரிகையில் வெளியாகி உள்ளன. இதன் முக்கிய அம்சங்கள்–

அல்பா வைரஸுடன் ஒப்பிடும்போது, டெல்டா வைரஸால் ஆஸ்பத்திரியில் சேர்க்கும் ஆபத்து அதிகமாக உள்ளது. டெல்டா வைரஸ் அதிகமாக பரவுகிற தன்மையைக் கொண்டுள்ளது.

தடுப்பூசி போட்டுக்கொள்ளாதவர்கள் டெல்டா வைரஸால் பாதிக்கப்படுவது, சுகாதார பராமரிப்பு சேவைக்கு மிகப்பெரிய சுமையாக அமையும். இங்கிலாந்தில் 43 ஆயிரத்து 338 கொரோனா நோயாளிகளை கடந்த மார்ச்–மே மாதங்களில் ஆய்வு செய்து இந்த முடிவுகள் தெரிவிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.







# காபூல் விமான நிலையத்திற்கு தலிபான் பயங்கரவாதிகள் சீல்

ஆப்கானிஸ்தான் அரசுக்கு எதிரான நீண்ட கால போரில் தலிபான் பயங்கரவாதிகள் வசம் ஆட்சி அதிகாரம் முழுமையாக சென்றுள்ளது. இதனை முன்னிட்டு ஆப்கானிஸ்தானில் சிக்கியுள்ள தங்கள் நாட்டு குடிமக்களை அமெரிக்கா, இந்தியா, இங்கிலாந்து, பிரான்ஸ் உள்ளிட்ட பல நாடுகள் மீட்டு வருகின்றன. சொந்த நாட்டை விட்டு வெளியேற நினைக்கும் ஆப்கானிஸ்தான் நாட்டு மக்களும் மீட்கப்பட்டு வருகின்றனர்.

இந்த மீட்புப் பணிகள் காபூல் விமான நிலையத்தில் இருந்து நடைபெறுகின்றன. இதற்காக, காபூல் விமான நிலையம் ஆனது, அமெரிக்கப் படைகளின் கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டது.

வருகிற 31ஆம் திகதிக்கு பின் காபூலில் மீட்பு பணிகள் நிறுத்தப்பட்டு படைகள் முழுவதும் திரும்பப்பெறப்படும் என அமெரிக்க அதிபர் பைடன் தெரிவித்துள்ளார். இதனால், ஆயிரக்கணக்கானோர் காபூல் விமான நிலையத்திற்கு வெளியே குவிந்து வருகின்றனர்.

காபூல் விமான நிலையம் மீது பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தலாம் என எச்சரிக்கை விடப்பட்டிருந்த நிலையில், காபூல் விமான நிலையத்திற்கு வெளியே கடந்த சில நாள்களுக்கு முன் இரட்டை குண்டுவெடிப்பு தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்த தாக்குதலில் 190 பேர் உயிரிழந்தனர். அவர்களில் 13 பேர் அமெரிக்க பாதுகாப்பு படை வீரர்கள் ஆவர். இந்த இரட்டை குண்டுவெடிப்பு தாக்குதலுக்கு ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பு பொறுப்பேற்றது. இந்த தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்துள்ள அமெரிக்க அதிபர் ஜோ பைடன், இந்த தாக்குதலில் ஈடுபட்டவர்களை வேட்டையாடுவோம் என கூறினார். அவர்களை பதிலுக்கு விலை கொடுக்க செய்வோம் என்றும் அவர் கூறினார்.

ஆப்கானிஸ்தானின் காபூல் விமான நிலையத்தில் நடந்த பயங்கரவாத தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு கௌரவம் அளிக்கும் வகையில், வருகிற 30ஆம் திகதி மாலை வரை அமெரிக்க கொடி அரைக் கம்பத்தில் பறக்க விடப்படும் என வெள்ளை மாளிகை தெரிவித்தது. இந்நிலையில், ஆப்கானிஸ்தானில் உள்ள ஐ.எஸ். பயங்கரவாதிகளை குறிவைத்து அமெரிக்கா நேற்று தாக்குதல் நடத்தியது. அந்தநாட்டின் நங்ஹகர் மாகாணத்தில் உள்ள ஐ.எஸ். கோரசான் பிரிவு பயங்கரவாதிகளை குறிவைத்து ஆளில்லா டிரோன் விமானம் மூலம் அமெரிக்கப் படையினர் வான்வெளி தாக்குதல் நடத்தினர். இதில் காபூல் விமான நிலைய தாக்குதலுக்கு மூளையாக செயல்பட்ட பயங்கரவாதி உள்பட முக்கிய பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர் என அமெரிக்கா அறிவித்து உள்ளது.

இந்நிலையில், காபூல் விமான நிலையத்திற்கு தலிபான்கள் சீல்வைத்துள்ளனர். இதனால் உள்நாட்டில் உள்ளவர்கள் வெளிநாட்டுக்கு செல்ல முடியாமல் தவித்து வருகின்றனர். ஒரு சிலர் தரைமார்க்கமாக பாகிஸ்தானில் தஞ்சம் அடைந்து உள்ளனர் என்றும் கூறப்படுகிறது. இந்த நிலையில் காபூல் விமான நிலையத்தில் மீண்டும் ஒரு தாக்குதல் நடத்தப்படலாம் என அமெரிக்கா எச்சரிக்கை செய்துள்ளது. உடனடியாக தனது நாட்டு குடிமக்களை காபூலில் இருந்து வெளியேறும்படியும் உத்தரவு பிறப்பித்து உள்ளது. இதனால் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

இறைச்சிக் கோழி விற்பனை
புறோயிலர், கல்பேட்ஸ், பேரன்ஸ் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் சுத்தம் செய்து மிகக் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

U.S.A பாம்
குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.
077 868 9500

Personal English Classes
K. GANESH (BA. Pera)
யாழ் நகரில் தனித்தனியாக அவரவரது தராதரத்திற்கு ஏற்றபடி
Grammar Fluent Spoken
Grade 7 -GCE O/L -A/L
பட்டதாரிகள், தொழில் புரிவோர் ஆர்வம் உள்ளோர் இங்கு வந்து விரிவாக விளக்கமாக கற்கமுடியும்

077 766 8725
நீராவியடி, யாழ்ப்பாணம்

Study in UK
• Minimum Requirement : GCE O/L (London or Local)
• IELTS minimum 4.0 average preferred
• Can apply without IELTS too
• Foundation / Diploma / Bachelors / Masters Programs
• Easy Visa Procedure / 28 days Bank Balance only required.
• Choice of Many Universities – Inner and Outer London
• Part time work during term time / Full time work during holidays.
Scholars Information Center
No. 527-1/1, First Floor, Galle Road, Wellawatte, Colombo 06.
Call : 0763 944 378

# இலங்கைத் தமிழர்கள் மறுவாழ்வு முகாம் என அழைக்கக்கூறும் அரசாணை வெளியீடு

இலங்கைத் தமிழர் அகதிகள் முகாம் என்பது 'இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்' என்று பெயர் மாற்றப்பட்ட தமிழக அரசின் அரசாணை இன்று வெளியாகியுள்ளது.

தமிழ்நாடு சட்டப்பேரவையில் நேற்று நடைபெற்ற மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின் போது உரையாற்றிய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், இனி இலங்கைத் தமிழர் அகதிகள் முகாம் என்பது இலங்கைத் தமிழர்கள் மறுவாழ்வு முகாம் என அழைக்கப்படும் எனவும், அதற்கான அரசாணை பிறப்பிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழர்கள் அனாதைகள் அல்ல எனவும் அவர்களுக்காக நாங்கள் இருக்கிறோம் எனவும் தெரிவித்த முதல்வர் மு.க.ஸ்டாலின், இலங்கைத் தமிழர்கள் நலனில் தமிழ்நாடு அரசு உறுதியாக இருக்கும் எனவும் குறிப்பிட்டார். இது தொடர்பான உத்தியோகபூர்வ அரசாணை இன்று வெளியிடப்பட்டுள்ளது.







## கொரோனாப் பாதிப்பு அதிகரிப்பின் எதிரொலி கேரளாவில் இன்று முழு ஊரடங்கு அமுலானது

இந்தியாவில் கொரோனாப் பாதிப்புகளை முன்னிட்டு கடந்த ஆண்டு மார்ச்சில் ஊரடங்கு அமுலானது. கொரோனாவின் இரண்டாவது அலையில் முதல் அலையை விட அதிக பாதிப்புகள் காணப்பட்டன. இந்த நிலையில், தொற்று எண்ணிக்கை சமீப நாள்களாக குறைந்துவருவதால் பல இடங்களிலும் தளர்வுகள் வழங்கப்பட்டுவருகின்றன.

எனினும், கேரளாவில் கொரோனாப்பரவல்அண்மையநாள்களில் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. கேரளாவில் கொரோனாப் பரவலைக் கட்டுப்படுத்தும் வகையில், முதல்வர் பினராயி விஜயன் தலைமையிலான அரசு, சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் பல்வேறு தளர்வுகளுடன் ஊரடங்கை அமுல் படுத்தியது. அதன்பிறகு ஒரு மாதத்திற்கு ஞாயிறு மட்டும் ஊரடங்கு நடைமுறை கடைப்பிடிக்கப்பட்டது. எனினும், அத்தியாவசியக் கடைகள் திறக்கவும் வாகனங்கள் இயங்கவும் அனுமதியளிக்கப்பட்டது.

இந்தச் சூழலில், சுதந்திர தினம், ஓணம் பண்டிகை ஆகியவற்றை முன்னிட்டு ஊரடங்கில் தளர்வுகள் அளிக்கப்பட்டு கடைகள் அனைத்தும் திறக்கப்பட்டன. இது கொரோனாப் பரவலுக்கு வழிவகுத்தது என்ற குற்றச்சாட்டுகள் எழுந்தன. இதனையடுத்து இன்று முழு ஊரடங்கை அமுல்படுத்துவது என கேரள அரசு முடிவு செய்தது.

இதன்படி, அத்தியாவசியத் தேவையின்றி இயங்கும் வாகனங்கள், வெளியே சுற்றித் திரிபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கவும் உத்தரவிடப்பட்டுள்ளது. இதனால், சாலைகளில் வாகனப் போக்குவரத்துக் குறைந்து வெறிச்சோடிக் காணப்பட்டன. விடுமுறைநாளான இன்று மிகக் குறைந்த அளவிலேயே வாகனங்களும் இயங்கின.

## தமிழகத்தில் அதிகரிக்கும் டெல்டா வகைக் கொரோனா சுகாதாரத்துறைச் செயலர் ராதாகிருஷ்ணன் எச்சரிக்கை



தமிழகத்தில் அதிகமானோர் டெல்டா வகை கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டிருக்கின்றனர் என சுகாதாரத்துறைச் செயலாளர் ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஊடகவியலாளர்களோடு உரையாடிய தமிழக சுகாதாரத்துறைச் செயலாளர் ராதாகிருஷ்ணன், "கொரோனா வகைகளைக் கண்டறியும் மரபணு ஆய்வகம் சென்னையில் அமைக்கப்பட்டுள்ளது. அது விரைவில் சோதனை அடிப்படையில் செயல்படத் தொடங்கும். டெல்டா வகை வைரஸ் பாதிப்பு அதிகரித்துள்ளது.

தமிழகத்தில் டெல்டா வகை வைரஸாலே அதிகம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டதில் 80% பேர் டெல்டா வகை வைரஸால் பாதிக்கப்பட்டவர்கள் என தெரியவந்துள்ளது. அண்மைய நாள்களாக கொரோனாப் பாதிப்பில் 100% டெல்டா வகையால் ஏற்படுகிறது என்பதும் உறுதியாகிறது.

டெல்டாவகைகொரோனா வைரஸ் சிகிச்சை குறித்து மக்கள் அச்சப்பட வேண்டியதில்லை. தேவையான அனைத்து சிகிச்சை வசதிகளும் தமிழகத்தில் உள்ளன. அதிக பண்டிகைகள் வரவுள்ளதால் மக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். கூட்டம் கூடுவதால்தான் கொரோனா அதிகளவு பரவுகிறது. கூட்டம் கூடுவதைத் தவிர்த்து மக்கள் எச்சரிக்கையாக இருந்தால் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்தலாம்'' என்று தெரிவித்துள்ளார்.

## புலம்பெயர் தமிழர் பாடப்புத்தகங்களில் காணப்பட்ட வரலாற்றுத் தவறுகள் திருத்தம் என சீமான் அறிக்கை

புலம்பெயர் நாடுகளில் பாடநூல்கள் எனும் பெயரில் ஒரு சில அமைப்புகளால் தமிழர்களுக்கெதிராக திட்டமிட்டுச் செய்யப்படும் ஈழத் தமிழர்கள் வரலாறு பற்றிய அவதூறுப் பரப்புரைகளையும், பொய்யுரைகளையும் தடுத்து முறியடிக்க உலகத்தமிழர்கள் துணைநிற்க வேண்டும் என சில தினங்களுக்கு முன்னர் நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் அறிக்கையொன்றின் மூலம் கோரிக்கை விடுத்திருந்தார்.

அந்த விடயம் தொடர்பாக அவரிடமிருந்து மீண்டுமொரு அறிக்கை வெளியாகியுள்ளது. குறித்த பாடப் புத்தகங்களில் இருந்த தவறான விடயங்கள் திருத்தப்பட்டுவிட்டன என அவர் அந்த அறிக்கையில் தெரிவித்திருக்கிறார்.

சீமானின் இரண்டாவது அறிக்கையில், புலம்பெயர் நாடுகளில் இயங்கும் தமிழர் அமைப்பொன்றினால் வெளியிடப்பட்ட தமிழ்க் குழந்தைகளுக்கான பாடசாலைப் பாடப் புத்தகங்களில் தமிழர் வரலாறுகள் முற்றிலும் தவறாகத் திரிக்கப்பட்டுப் பதிவு செய்து விடக்கூடாது என்ற நோக்கில் தவறுகளைச் சுட்டிக்காட்டினேன் என அவர் கூறியிருக்கிறார்.

அந்தப் பாடப்புத்தகங்களின் திருத்தப்பட்ட பக்கங்களை தனது பார்வைக்கு அனுப்பியிருந்ததாகவும் உண்மையான வரலாற்றைப் பாடப் புத்தகங்களில் இடம்பெறச் செய்ய அந்த


25-08-2021

உண்மையான வரலாற்றைப் பாடப் புத்தகங்களில் இடம்பெறச் செய்ய உழைத்திட்ட அறிஞர் குழுவிற்கும், உலகத் தமிழர்களுக்கும், தமிழர் அமைப்புகளுக்கும் எனது வாழ்த்துகளும் அன்பும்!

SeemanOfficial www.naamtamilar.org

அமைப்பு செயல்பட்டிருப்பது கண்டு மகிழ்வுறுகிறேன் எனவும் இதற்காக உழைத்திட்ட அறிஞர் குழுவிற்கும், உலகத்தமிழர்களுக்கும், தமிழர் அமைப்புகளுக்கும் தனது வாழ்த்துகளையும், அன்பினையும் தெரிவித்துக் கொள்கிறேன் எனவும் சீமான் குறிப்பிட்டிருக்கிறார்.

## மிக முக்கிய பிரமுகர்களின் வருகைக்காக நீண்டநேரம் போக்குவரத்தை நிறுத்த வேண்டாம்

மிக முக்கிய பிரமுகர்கள் வருகைக்காக பொதுமக்கள் போக்குவரத்தை நீண்ட நேரம் நிறுத்தக்கூடாது என்று இந்திய குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் அறிவுறுத்தியுள்ளார்.

உத்தரப்பிரதேச மாநிலம் லக்னோவில் பாடசாலை நிகழ்ச்சி ஒன்றில் உரையாற்றிய அவர், தாம் பயணம் மேற்கொள்ளும் போதெல்லாம் நீண்ட நேரத்திற்கு முன்பே போக்குவரத்து நிறுத்தப்படுவதைக் கவனித்துள்ளேன் எனவும், அதனால் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றமை வேதனையாக உள்ளது எனவும் தெரிவித்தார்.

எனவே, மக்களைப் பாதிக்கும் வகையில் இவ்வாறு பொதுப் போக்குவரத்தை அதிக நேரத்துக்கு நிறுத்தி வைப்பதை பாதுகாப்புத் தரப்பினர் தவிர்க்கவேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியிருக்கிறார்.

# புகழ்ந்து பேசி நேரத்தை வீணடித்தால் நடவடிக்கை தி.மு.கவினருக்கு முதல்வர் ஸ்டாலின் எச்சரிக்கை



தமிழக சட்டப்பேரவையில் தலைவர்களைப் புகழ்ந்து பேசுவதில் நேரத்தை வீணாக்க வேண்டாம் என்றும் மீறிப் பேசினால் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தி.மு.கவின் எம்.எல்.ஏக்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தியுள்ளார். மானியக்கோரிக்கை மீதான விவாதத்தின்போது தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் ஐயப்பன் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினைப் புகழ்ந்து பேசினார்.

இது குறித்து அதிருப்தி தெரிவித்த மு.க.ஸ்டாலின், "மானியக்கோரிக்கை மீதான விவாதத்தில் தன்னைப் புகழ்ந்து பேசினால் தி.மு.கவின் எம்.எல்.ஏக்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். அவையின் நேரத்தை வீண் பேச்சுக்களால் வீண்டிக்க வேண்டாம் என முன்னரே எச்சரித்தேன். எதையும் அளவோடு வைத்துக்கொள்ளுங்கள்" என்று அவர் அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

# கொரோனா நோயாளிகளின் தரவுகளிலே முரண்பாடான தகவல்களை தரும் அரசு

## நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் கேள்வி




கொரோனா நோயாளிகளின் தரவுகளிலேயே அரசாங்கம் இவ்வாறு முரண்பாடாக விவரங்களை வெளியிடுகின்றதென்றால், இறுதி யுத்தத்தில் இறந்தவர்கள் தொடர்பான புள்ளி விவரங்களை எவ்வாறு நம்ப முடியும் என நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் கேள்வி எழுப்பியுள்ளார்.

நேற்று சனிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த ஊடகவியலாளர் சந்திப்பில் இரா.சாணக்கியன் மேலும் கூறியுள்ளதாவது, ஒவ்வொரு மாவட்டங்களிலும் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகின்றோர் தொடர்பான விவரங்களை சுகாதார அமைச்சின் கொவிட் பிரிவு வெளியிடுகின்றது.

அதில் மட்டக்களப்பு பிராந்தியத்தில் கொரோனாவின் மூன்றாவது அலையில் தொற்றாளர்களின் எண்ணிக்கை 4 ஆயிரத்து 11 ஆகவும் கல்முனை பிராந்தியத்தில் 2 ஆயிரத்து 602 ஆகவும் திருகோணமலையில் 2 ஆயிரத்து 906 ஆகவும் காட்டப்படுகின்றது.

அதாவது மொத்த தொற்றாளர்களாக மட்டக்களப்பில் 4 ஆயிரத்து 811, கல்முனையில் 3 ஆயிரத்து 916, திருகோணமலையில் 3 ஆயிரத்து 561 என்று கொழும்பில் இருந்து வெளியாகும் சுகாதார அமைச்சின் கொவிட் பிரிவினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால், உரிய பிராந்தியங்களில் இருந்து வெளியிடப்படும் தரவுகளைப் பார்த்தால் கொரோனாவின் மூன்றாவது அலையிலே மட்டக்களப்பில் 14 ஆயிரத்து 882 தொற்றாளர்கள், கல்முனையில் 4 ஆயிரத்து 761 தொற்றாளர்கள், திருகோணமலையில் 3 ஆயிரத்து 516 தொற்றாளர்கள். இது மூன்றாவது அலையில் மாத்திரம்.

கொழும்பில் காட்டப்படுகின்ற தரவுகள், மாவட்ட ரீதியான தரவுகளுக்கு சுமார் மூன்று மடங்கிற்கும் குறைவான தரவுகள் காட்டப்படுகின்றன.

அதேபோன்று கொரோனா மரணங்களைப் பார்த்தோமானாலும் 2021.08.26ஆம் திகதிக்குரிய தரவின் படி மட்டக்களப்பில் 24 மணிநேரத்தினுள் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 10, திருகோணமலையில் 07, கல்னையில் 01 என்று காட்டப்பட்டுள்ளது. இதனை நாங்கள் நம்ப முடியுமா?

இவ்வாறு நோயாளிகளின் எண்ணிக்கையில், பொய்யான தரவுகள் வெளியிடுகின்றார்கள் என்றால் இறப்பவர்களின் எண்ணிக்கை எவ்வாறு உண்மையானது என நம்ப முடியும்?

கொரோனா நோயாளிகளின் தரவுகளிலேயே இவ்வாறு என்றால் இறுதி யுத்தத்தில் இறந்தவர்கள் மற்றும் யுத்த காலத்தில் கொல்லப்பட்டவர்களின் புள்ளி விவரங்களை நாங்கள் எவ்வாறு நம்புவது? இதே அரசாங்கம் தான் அந்த நேரத்திலும் இருந்தது.

இந்த உயிரிழப்புகள் அனைத்துக்குமான காரணம் தடுப்பூசி உரிய காலத்தில் வழங்காமை. உண்மையில் இலங்கையில் 88 வீதமானவர்களின் இறப்பு இரு தடுப்பூசிகளையும் பெறாதவர்களாகவே இருக்கின்றனர்.

மேலும் கல்முனை பிராந்தியத்தில் இதுவரை கிடைத்த இரண்டாவது தடுப்பூசியின் விகிதாசாரம் பூச்சியமாகும் அதேபோல் திருகோணமலையிலும் பூச்சியமாகவே இருக்கின்றது. மட்டக்களப்பில் மாத்திரம் இரண்டாவது தடுப்பூசி 32 வீதம் கிடைத்திருக்கின்றது என அவர் சுட்டிக்காட்டினார்.

## கொரோனாத் தொற்றினால்

# மரணமடையும் உடல்களை அடக்கம் செய்வதில் சிரமம்

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை மற்றும் வீடுகளில் கொரோனாத் தொற்றினால் மரணமடையும் உடல்களை அடக்கம் செய்வதில் பல சிரமங்களை எதிர்கொண்டு வருகிறோம் என மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

தற்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் நாளுக்கு நாள் கொரோனாத் தொற்றினால் மரணமடையும் உடல்களை எடுத்துச் செல்வதற்கு உறவினர்களின் ஒத்துழைப்பு கட்டாயம் அவசியம் எனவும் அதனால் குடும்ப உறவினர்கள் உடல்களை வைத்து அடைக்கப்படும் பெட்டிகளை பாதுகாப்பு உடைகள் இன்றி சுகாதார ஊழியர்களுடன் இணைந்து தூக்கி ஏற்றிச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

அத்தோடு போதனா வைத்தியசாலையில் கொரோனாத் தொற்றினால் மரணமடையும் உடல்களை வைக்கும் பிரேத அறையின் முன்னால் அதிகமான உறவினர்கள் பாதுகாப்பு அங்கிகள் இன்றி கூட்டமாக நின்று பார்வையிட அனுமதிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எனவே இவ்விடயம் சம்பந்தமாக உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பதன் மூலம் கொரோனாத் தொற்றில் இருந்து மக்களை பாதுகாக்க முடியும் என தெரிவிக்கப்படுகிறது.

# மட்டக்களப்பில் மூன்று வாரங்களில் 13 பேர் சாவு

*மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கடந்த மூன்று வாரங்களில் 13 கொரோனா மரணங்கள் இடம்பெற்றுள்ளன என சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் கே .கிரிசுதன் தெரிவித்துள்ளார்.*

*நேற்று மட்டக்களப்பு மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் நடைபெற்ற பிரதேச செயலக மட்ட கொவிட் செயலணி ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தை தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.*



# நட்பிட்டிமுனையில் நடமாடும் தடுப்பூசி செலுத்தும் பணிகள்

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பிரிவின் பணிப்பாளர் ஜீ.சுகுணனின் நெறிப்படுத்தலில் பிராந்திய சுகாதாரப் பிரிவுகளில் இராணுவத்தினரின் பங்களிப்புடன் நடமாடும் தடுப்பூசி செலுத்தும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் கல்முனை தெற்கு சுகாதாரப் பிரிவில் சுகாதார வைத்திய அதிகாரி ஏ. ஆர். எம். அஸ்மி தலைமையில், கல்முனைப் பிராந்திய இராணுவ மேஜர் சாந்த விஜேயகோனின் ஒத்துழைப்புடன் நட்பிட்டிமுனை பகுதியில் தெற்கு சுகாதார உத்தியோகத்தர்களுடன் இராணுவத்தினரும் இணைந்து 60 வயதிற்கு மேற்பட்ட முதலாவது தடுப்பூசி இதுவரை பெறாத நபர்கள், தடுப்பூசி நிலையங்களுக்கு வந்து தடுப்பூசியினை பெற முடியாதவர்களுக்கு வீடுகளுக்கு நேரடியாக சென்று தடுப்பூசி செலுத்தும் பணி நேற்று இடம்பெற்றது.

இதன்போது தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக அதிகாரிகள், பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள், கிராம அலுவலர்கள், செயலணி பயிற்சியாளர்கள் என பலரும் கலந்துகொண்டு தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

## பாண்டிருப்பு உளநல மறுவாழ்வு இல்லத்தில் 17 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று

கல்முனை வடக்கு பிராந்திய சுகாதாரப் பணிமனைக்கு உட்பட்ட பாண்டிருப்பு எல்லை வீதியில் அமைந்துள்ள உளநல மறு வாழ்வு இல்லத்தில் தங்கியுள்ள விசேட தேவையுடைய பிள்ளைகள் 17 பேர் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளனர். இதனையடுத்து குறித்த நிலையம் எதிர்வரும் 9 ஆம் திகதி வரை 14 நாள்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக கல்முனை வடக்கு பிராந்திய சுகாதாரப்பணிமனை தெரிவித்துள்ளது.

பாண்டிருப்பில் உளநலம் பாதிக்கப்பட்டவர்கள் தங்கியுள்ள மறுவாழ்வு இல்லத்தில் சிலருக்கு காய்ச்சல் இருப்பதாக சுகாதாரப் பிரிவினருக்கு தெரிவிக்கப்பட்டதையடுத்து அங்குள்ள 24 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் 17 பேர் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.

கல்முனை வடக்கு பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் ஆர்.கணேஸ்வரன் தலைமையிலான பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், குடும்பநல உத்தியோகத்தர்கள் அடங்கிய குழுவினர் பிரதேசத்தில் கொரோனாத் தொற்றைக் கண்டறிவதற்கான அன்டிஜன் மற்றும் பி.சி.ஆர். பரிசோதனைகளில் தொடர்ச்சியாக ஈடுபட்டுவருகின்றனர்.

# மட்டக்களப்பு மாவட்டத்தில் டெல்டா திரிவு அடையாளம்




மட்டக்களப்பு மாவட்டத்தில் டெல்டா திரிவு அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் இது தொற்றும் வீதம் அதிகமாகவும் மரண வீதம் அதிகமாக ஏற்படுத்தக்கூடியது எனவும் மக்களை அவதானமாக செயற்படுமாறும் மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் நாகலிங்கம் மயூரன் தெரிவித்தார்.

நேற்று மாலை மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் காரியாலயத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த 24மணி நேரத்தில் 274கொரோனாத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளமையுடன் 10பேர் மரணமடைந்துள்ளனர்.

மட்டக்களப்பு பகுதியில் 56பேரும், களுவாஞ்சிகுடி பகுதியில் 47பேரும், செங்கலடி பகுதியில் 48பேரும், வவுணதீவு பகுதியில் 27பேரும், வெல்லாவெளி பகுதியில் 28பேரும் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர்.

மரணமடைந்தவர்களில் மட்டக்களப்பில் மூவரும், களுவாஞ்சிகுடி, வாழைச்சேனை, செங்கலடி, ஏறாவூர், வவுணதீவு, வெல்லாவெளி, ஆரையம்பதி பகுதிகளில் தலா ஒருவரும் மரணமடைந்துள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மொத்தமாக 211பேர் கொரோனாத் தொற்றினால் மரணமடைந்துள்ளனர்.

கடந்த வாரத்தில் 1,982 கொரோனாத் தொற்றாளர்கள் இனங் காணப்பட்டுள்ளமையுடன் 36 பேர் மரணமடைந்துள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் சராசரியாக 300 கொரோனாத் தொற்றாளர்கள் இனங்காணப்படுவதுடன் சராசரியாக ஐந்து மரணங்களும் நிகழ்கின்றன.

நேற்று மருத்து ஆராய்ச்சி நிறுவகத்தினால் வழங்கப்பட்ட அறிக்கையின்படி முதன் முறையாக டெல்டா திரிவு அடையாளம் காணப்பட்டுள்ளது. அல்பா திரிவு மட்டுமே மட்டக்களப்பில் அடையாளம் காணப்பட்டிருந்தது. அல்பா திரிவுடன் ஒப்பிடும்போது டெல்டா திரிவு தொற்றும் தன்மை அதிகமாகவும் மரண வீதம் அதிகமாகவும் காணப்படுகின்றது.

பொதுமக்கள் வீட்டில் இருப்பதன் மூலமே கொவிட் தொற்றினை கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரமுடியும். அத்துடன் சுகாதார நடைமுறைகளை இறுக்கமாக பின்பற்ற வேண்டும்.

தடுப்பூசியைப் பொறுத்த வரையில் முதல் தடுப்பூசி 2,70,000 வரையில் ஏற்றப்பட்டுள்ளது. 30வயதுக்கு மேற்பட்ட 92வீதமானவர்களுக்கு முதலாம் கட்ட தடுப்பூசிகள் ஏற்றப்பட்டுள்ளன. இரண்டாம் கட்டமாக 30வயதுக்கு மேற்பட்ட 108,000பேருக்கு தடுப்பூசிகள் ஏற்றப்பட்டுள்ளன.

37வீதமான மக்களை உள்ளடங்குகின்றது. இரண்டாம் கட்ட தடுப்பூசி வழங்குவதற்கு 115,000 வரையான தடுப்பூசிகள் கிடைக்கப் பெற்றன. நாளை(இன்று) இன்னும் ஒரு லட்சம் தடுப்பூசிகள் கிடைக்கப்பெறவுள்ளன.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# தென்னாபிரிக்காவுடனான ஒருநாள் தொடரில் குசல் பெரேரா விளையாடமாட்டாராம்?




இலங்கை வந்துள்ள தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியுடனான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசத் தொடரில், இலங்கை அணியின் விக்கெட் காப்பாளரான குசல் பெரேரா விளையாடுவது சந்தேகம் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த 15 ஆம் திகதி குசல் பெரேராவுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில், அவருக்கு கொவிட்-19 தொற்று இருப்பது உறுதிசெய்யப்பட்டது. இதனால், அவர் 10 நாள்கள் தனிமைப்படுத்தலுக்கு ஆயினும், அரசாங்கத்தின் தற்போதைய சுகாதார விதிமுறைப்படி மேலும் 4 நாள்களுக்கு அவர் வீட்டில் தனிமைப் படுத்தலில் இருக்கவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக அவரால் அணியின் 'பயோபபிள்' இனுள் இணைந்துகொள்ளவும் பயிற்சிகளில் ஈடுபடவும் முடியாது போயுள்ளது. எனவே, அவர் எதிர்வரும் 2 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள தென்னாபிரிக்க அணிக்கு எதிரான ஒருநாள் தொடரில் விளையாட முடியாது எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இங்கிலாந்துத் தொடரின்போது குசல் பெரேராவுக்கு தோள்பட்டையில் உபாதை அதன் காரணமாக அவர் இந்திய அணிக்கெதிரான தொடரில் விளையாடாமல் ஓய்விலிருக்க நேர்ந்திருந்தது.

தென்னாபிரிக்க அணிக்கெதிரான ரி-20 தொடருக்கு குசல் பெரேரா தயாராகி விடுவார் என இலங்கை கிரிக்கெட் சபை வட்டாரங்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ள நிலையில், ஒருநாள் தொடருக்கு அணியின் விக்கெட் காப்பாளராக மினோத் பானுக அல்லது தினேஷ் சந்திமால் செயற்படுவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

தென்னாபிரிக்க அணிக்கு எதிரான ஒருநாள் தொடர் எதிர்வரும் செப்டெம்பர் 2 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மைதானத்துக்குள் குழப்பம் விளைவித்த ஜார்வோவுக்கு வாழ்நாள் தடைவிதிப்பு

இங்கிலாந்து – இந்திய அணிகளுக்கிடையிலான டெஸ்ட் கிரிக்கெட் தொடரில் மைதானத்துக்குள் குழப்ப நடவடிக்கையில் ஈடுபட்ட ஜார்வோ என்ற நபர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்தியா – இங்கிலாந்து டெஸ்ட் தொடரில் வெற்றி, தோல்விகளைத் தாண்டி அதிகம் பேசப்படுவது ஜார்வோ என்ற நபரைப் பற்றித்தான். இந்த டெஸ்ட் தொடரை தொடர்ச்சியாக அவதானித்து வரும் ரசிகர்களுக்கு இந்தப் பெயர் நிச்சயம் தெரியாமல் இருக்காது.






லண்டன் லோர்ட்ஸ் மைதானத்தில் நடைபெற்ற இரண்டாவது டெஸ்ட் போட்டியின்போது இந்திய அணியின் சீருடையணிந்த ஜார்வோ, களத்தடுப்பில் ஈடுபடும் வீரரைப்போல மைதானத்துக்கு உள்ளே நின்றார் அதனை அவதானித்த நடுவர்கள், மைதான ஊழியர்கள் உதவியுடன் அவரை வெளியேற்றினர். அசலாக இந்திய கிரிக்கெட் அணியின் சீருடையை அவர் அணிந்திருந்தார்.

69 என்ற எண்ணும் அவரது பெயரும் அந்தச் சீருடையில் பொறிக்கப்பட்டிருந்ததால் அவரும் ஒரு இந்திய வீரர்தான் என நடுவர்களும், பார்வையாளர்களும் முதலில் நம்பிவிட்டனர்.

லோர்ட்ஸைத் தொடர்ந்து மூன்றாவது டெஸ்ட் நடைபெற்ற ஹெடிங்லி மைதானத்திலும் தனது திருவிளையாடலை சற்றே மாறுபட்ட விதத்தில் அவர் செய்தார்.

ரோஹித் சர்மா 59 சென்ற போது கோலி மைதானத்துக்குள் நுழையும் முன், இவர் ஹெல்மெட், கால் காப்பு எல்லாம் அணிந்த கொண்டு துடுப்பாட்ட வீரர் போன்று மைதானத்துக்குள் நுழைந்துவிட்டார்.

இதைப் பார்த்து அனைவரும் அதிர்ச்சியடைய, மைதானப் பாதுகாவலர்கள் வந்து அவரை வெளியே இழுத்துக்கொண்டு சென்றனர்.

ஹெல்மெட் அணிந்து, அதற்குள் ஒரு முகக்கவசமும் அணிந்து வந்து ரகளை செய்த இவர், இங்கிலாந்து அணி விளையாடும் போட்டிகளின்போது ஆடுகளங்களுக்குள் வந்து இவ்வாறு வேடிக்கையாகக் குழப்பங்கள் செய்வதை வாடிக்கையாக செய்துவருவதால், ஆட்டத்தின் போது பாதிப்பை ஏற்படுத்தும் இவரைப் போன்ற நபர்களுக்கு தண்டனை கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கை வலுத்திருந்தது.

இந்த நிலையில் ஹெடிங்லி மைதானத்திற்குள் இனி வாழ்நாள் முழுவதும் நுழைவதற்கு ஜார்வோவுக்கு இங்கிலாந்து கிரிக்கெட் சபை தடை விதித்துள்ளது.

## ஷொட்களைத் தேர்வு செய்து அடிப்பதில் கோலி தவறிழைக்கிறார் என்கிறார் கவாஸ்கர்



இங்கிலாந்தில் விளையாடும் போட்டிகளின்போது ஷொட்களைத் தேர்வு செய்து விளையாடுவதில் கோலி தவறிழைத்துவிட்டார் என்று இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித்தலைவரும் கிரிக்கெட் வர்ணனையாளருமான சுனில் கவாஸ்கர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து அணிக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் போட்டியில் இந்தியா இன்னிங்ஸால் தோல்வியடைந்தது. இந்த இங்கிலாந்துத் தொடரில் இந்திய கப்டன் கோலி இதுவரை விளையாடியுள்ள 5 இன்னிங்ஸில் மொத்தம் 124 ஓட்டங்களை மட்டுமே சேர்த்துள்ளார். லீட்ஸ் டெஸ்ட் போட்டியின் இரண்டாவது இன்னிங்ஸில் முதல் நாளில் பொறுமையாக விளையாடிய அவர், அடுத்த நாளில் இலகுவாக 55 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

இந்தத் தொடரில் கோலியின் துடுப்பாட்டம் மீது கடுமையான விமர்சனங்கள் எழுந்துள்ளன. இது குறித்து தொலைக்காட்சிக் கலந்துரையாடலில் பேசிய சுனில் கவாஸ்கர், கோலி தன்னுடைய ஷொட்களைத் தேர்வு செய்வதில் தவறிழைத்துவிட்டார். மிகவும் விளையாடியிருக்க வேண்டும். டெஸ்ட் போட்டிகளில் 8,000 ஓட்டங்களை அவர் சேர்த்துள்ளார்.

துடுப்பெடுத்தாடும் போது கிறீஸுக்கு வெளியே நின்று விளையாடி 6,500 ஓட்டங்களை எடுத்துள்ளார். அதனால், அந்தப் பாணியை அவர் மாற்ற வேண்டிய அவசியமில்லை. கோலியின் ஷொட் தேர்வில்தான் பிரச்சினை உள்ளது என்று தெரிவித்திருக்கிறார்.

எந்தப் பந்தை அடிக்க வேண்டும், எதை விட வேண்டும் என்பதில் கவனம் வேண்டும். புஜாரா தன்னுடைய இன்னிங்ஸில் அதைச் சரியாகச் செய்தார். இதுவரை கோலி ஆட்டமிழந்த பந்தையும் அவர் விளையாடியிருக்க வேண்டிய அவசியமில்லை. போட்டி நிறைவடைய இன்னும் ஒரு நாளும், அணி 139 ஓட்டங்கள் பின் தங்கியும் இருக்கும்போது ஷொட்களில் இன்னும் கூடுதல் கவனம் தேவை. நான்காவதாக ஸ்டம்ப் இருக்கக்கூடிய இடத்துக்குப் பந்து வந்தால் அதை விளையாடலாம். ஆனால் 5, 6 ஆவது ஸ்டம்ப் அளவுக்குப் போகும் பந்தை அடிக்க வேண்டிய அவசியமில்லையே. என்றும் சுனில் கவாஸ்கர் குறிப்பிட்டிருக்கிறார்.

## பாரா ஒலிம்பிக்கில் இந்தியாவுக்கு முதல் பதக்கம்



டோக்கியோவில் நடைபெற்றுவரும் பாரா ஒலிம்பிக்கில் இந்தியாவுக்கு முதல் பதக்கமாக டேபிள் டென்னிஸ் போட்டியில் வெள்ளிப்பதக்கம் கிடைத்துள்ளது.

அரையிறுதிப் போட்டியில் சீனாவின் மியாவோ ஸாங்குக்கு எதிராக இந்தியாவின் பவினா பட்டேல் 3-2 என்ற செட் கணக்கில் வென்று இறுதிப் போட்டிக்கு முன்னேறினார்.

இதன் மூலம் குறைந்தபட்சம் வெள்ளிப்பதக்கம் கிடைப்பதை அவர் உறுதி செய்திருந்தார்.

இன்று காலை நடைபெற்ற இறுதிப் போட்டியில், உலகின் முதல் நிலை வீராங்கனையான சீனாவின் ஸோ-யிங்கை பவினா படேல் எதிர்கொண்டிருந்தார். பரபரப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில், 7-11, 5-11, 6-11 என்ற நேர் செட் கணக்கில் பவினா தோல்வியடைய, அவருக்கு வெள்ளிப்பதக்கம் கிடைத்தது.

# சிறு, நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் 45 லட்சம் பேர் முடக்கத்தினால் பாதிப்பு

## அஜித் நிவார்ட் கப்ரால் தெரிவிப்பு



நாட்டை முடக்கியுள்ளதால் சுமார் 45 லட்சம் சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். எனவே நாட்டைத் தொடர்ந்தும் முடக்கினால் பொருளாதாரம் பெருமளவில் பாதிக்கப்படும் என நிதி மூலதனச் சந்தை இராஜாங்க அமைச்சர் அஜித் நிவார்ட் கப்ரால் குறிப்பிட்டுள்ளார்.

தனது உத்தியோகபூர்வ முகப்புத்தக பக்கத்தில் இது தொடர்பில் அவர் செய்துள்ள பதிவில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு கொவிட் தாக்கத்தைக் கருத்திற் கொண்டு நாடளாவிய ரீதியில் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

சுகாதாரக் காரணிகளைக் கருத்திற் கொண்டு நாட்டை முடக்கியதால் பொருளாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. நாட்டை முடக்குவதால் நாளொன்றுக்கு சுமார் 1,500 கோடி ரூபா அரச வருமானம் இழக்கப்படுகிறது.

ஊரடங்குச் சட்டத்தை நடைமுறைப் படுத்துவதால் ஏற்படும் விளைவுகள் தொடர்பாக எதிர்த்தரப்பினர் முதலில் தெளிவு பெற வேண்டும்.

நாட்டை தொடர்ந்து முடக்கினால் அத்தியாவசியப் பொருள்களின் விலை அதிகரிக்கக் கூடும். தற்போதும் பெரும்பாலான பொருள்களின் விலைகள் சடுதியான உயர்வடைந்துள்ளன.

கொவிட் தாக்கத்தைக் கருத்திற் கொண்டு கடந்த 20 ஆம் திகதி நாடளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்தப்பட்ட தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் செப்டெம்பர் 6 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. இதனால் சுமார் 45 லட்சம் சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளார்கள் எனவும் அவர் தனது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

# கொரோனா தடுப்பு செயலணிக்கு பந்துலவால் பேராபத்து நிலை



இலங்கை அரசாங்கத்தின் கொவிட் தடுப்பு செயலணிக் கூட்டத்தில் கலந்து கொண்ட வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன, கொவிட் தொற்றுக்கு உள்ளானமையை அடுத்து கொவிட் தடுப்பு செயலணி தொற்று ஆபத்தை எதிர்நோக்கியுள்ளது.

செயலணிக்கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமாகும் முன்னர் பந்துல குணவர்தன, அமைச்சர் டலஸ் அழகப்பெரும, இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே மற்றும் ஜனாதிபதியின் முதன்மை ஆலோசகர் லலித் வீரதுங்க ஆகியோரை தேநீருக்காக சந்தித்தார் என கொழும்பின் ஊடகம் ஒன்று தெரிவிக்கிறது.

இதன்போது, சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளே தேநீர் அருந்தவில்லை என்றும் முகக்கவசம் அணிந்திருந்தார் என்றும் கூறப்படுகிறது. எனினும் அழகப்பெரும மற்றும் லலித் வீரதுங்க இருவரும், தேநீர் அருந்துவதற்காக முகக்கவசங்களை நீக்கினார்கள் என்று தெரியவந்துள்ளது. இதனையடுத்து அவர்கள் சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல மற்றும் இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா ஆகியோர் கொவிட் செயலணிக் கூட்டத்தில் கலந்து கொண்டனர். இதன்போது, பந்துல குணவர்தன சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல மற்றும் ஊடக அமைச்சர் டலஸ் அழகப்பெருமாவுக்கு அருகில் அமர்ந்திருந்தார். இந்த நிலையில், அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல நேற்று (சனிக்கிழமை) அன்டிஜன் சோதனை எடுத்தார் எனவும், எனினும் முடிவு எதிர்மறையாக இருந்ததாகவும் தெரி விக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சின் செயலாளர் டாக்டர் எஸ்.எச். முனசிங்க இந்த சந்திப்பில் கலந்து கொண்ட நிலையில், அவரும் அன்டிஜன் பரிசோதனையை மேற்கொண்டார்.

தற்செயலாக, அமெரிக்காவால் வழங்கப்பட்ட பைஸர் - பயோஎன்டெக் தடுப்பூசிகளை ஏற்கும் நிகழ்வில் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல நேற்று கலந்து கொண்டார். இந்த நிகழ்வில், இலங்கை மற்றும் மாலைதீவுக்கான அமெரிக்க தூதுவர் எலைய்னா பி டெப்லிட்ஸும் கலந்து கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பைஸர் தடுப்பூசி நிர்வகிப்பு அதிகாரம் இராணுவத்திடம்



கொவிட் -19 தடுப்பூசித் திட்டத்தின் கீழ் பைஸர்-பயோஎன்டெக் தடுப்பூசியை நிர்வகிக்கும் அதிகாரம் இலங்கை இராணுவத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

புத்தளம் உட்பட பல பகுதிகளில் இருந்து பைஸர்-பயோஎன்டெக் தடுப்பூசி நிர்வகிப்பு தொட்பில் பல்வேறு முரண்பாடுகள் பதிவாகிய பின்னர் இந்த முடிவு எட்டப்பட்டது.

எனவே இதுபோன்ற விடயங்களை கருத்தில் கொண்டு, பைஸர் தடுப்பூசி நிர்வாகம் எதிர்காலத்தில் இராணுவத்தால் வழிநடத்தப்படும் என்று இராணுவ தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா கூறியுள்ளார்.

சாதாரண நடைமுறையின் கீழ் தடுப்பூசி பெற தகுதியற்ற எந்தவொரு தனிநபருக்கும் பைஸர் தடுப்பூசி வழங்கப்படமாட்டாது என்றும் இராணுவத் தளபதி தெரிவித்தார்.

# சிரேஷ்ட சட்டத்தரணி கௌரிசங்கரி தவராசாவுக்கு இன்று இறுதி நிகழ்வும் நிரந்தரப் பிரியாவிடையும்













கொரோனாவுக்குப் பலியான சிரேஷ்ட சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசா அவர்களுடைய இறுதி ஊர்வலம் இன்று காலை கொழும்பு பொரளை மயானத்தில் இந்து முறைப்படி நடைபெற்றது.

கொரோனா சட்ட விதிகளுக்கு அமைய சட்டத்தரணிகள், நீதிவான்கள், மேல் நீதிமன்ற நீதிபதிகள், உயர்நீதிமன்ற நீதியரசர்கள், ஊடகவியலாளர்கள், எழுத்தாளர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பிரமுகர்கள் கலந்து கொண்டு, சிரேஷ்ட சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசாவின் நினைவில் பங்குகொண்டு அவருக்கு நிரந்தரப் பிரியாவிடை அளித்தனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 29.08.2021இல் வெளியிடப்பெற்றது.